# EASTERN UNIVERSITY, SRI LANKA

## FACULTY OF COMMERCE AND MANAGEMENT

## FIRST YEAR / SECOND SEMESTER EXAMINATION IN BACHELOR OF BUSINESS ADMINISTRATION / COMMERCE -2002/2003 (MARCH-2004)

## MGT 1013 PRINCIPLES OF MANAGEMENT

**Answer all questions** **Time: 03 hours**

1. வரையறுக்கப்பட்ட டேவிட் அன்டனி அன்ட் சன்ஸ் (தனியார்) கம்பனி பல்வேறுபட்ட வியாபாரங்களில் ஈடுபடும் ஓர் கம்பனித் தொகுதியாகும் இதன் ஸ்தாபகரான திரு.டேவிட் அன்டனி தமது வியாபாரத்தினை தனது மனைவி மரியதிரேசா அன்டனியிடமும் தமது பிள்ளைகளான இயூஜின், மத்தியூ, பிலிப் மகள் கிறிஸ்டினா என்பவர்களிடம் ஒப்படைத்துவிட்டு சில ஆண்டுகளுக்கு முன் இறந்துவிட்டார்.

ஒவ்வொரு பிள்ளைகளும் ஒவ்வொரு உபகம்பனிகளுக்கும் முகாமையாளராக உருவாகினர். ஆதே வேளை அவர்களின் தாயான திருமதி.மரியதிரேசா அன்டனி அனைத்து கம்பனி தொகுதிகளுககும் தலைமை வகித்ததுடன் வரையறுக்கப்பட்ட டேவிட் அன்டனி புரபட்டி டிரேடர்ஸ் (தனியார்) கம்பனியின் முகாமை இயக்குனராகரும் பணியாற்றுகின்றார்.

ஜப்பானிலிருந்து இரண்டாந்தர வாகனங்களை இறக்குமதி செய்யும் வரையறுக்கப்பட்ட டேவிட் அன்டனி ஓடொமொபைல் (தனியார்) கம்பனிக்குப் பொறுப்பாக திரு.இஜின் செயற்படுகின்றார். இது அக்கம்பனிக்கு வாகனங்களை வினியோகிக்கும் தனது நண்பர் திரு.சுசகியின் கூட்டினைப்பினால் உருவாக்கப்பட்டது. இதனால் சுசுகிற்கு வியாபாரத்தில் சம பங்கு வழங்கப்பட்டது.

மின்சார கம்பிகள், கட்டட மின்சார பொருத்துக்கள் போன்ற ஒப்பந்தங்களைமேறகொள்ளும் வரையறுக்கப்பட்ட டேவிட் அன்டனி எலக்றிகல் (தனியார்) கம்பனிக்கு பொறுப்பாக திரு.மத்தியூ விளங்குகின்றார். திரு.மத்தியூவின் மனைவியான மனோகரி மின் பொறியியலாளராக காணப்படுவதால் இக்கம்பனியின் தொழில்நுட்ப உதியோகத்தராகவும், பங்காளராகவும் செயற்படுகின்றார்.

நிர்மான தொழிலுக்கு கட்டிடப் பொருட்களை வழங்கும் வரையறுக்கப்பட்ட டேவிட் அன்டனி ஹாட்வெயார் (தனியார்) கம்பனி திரு.பிலிப் என்பவரால் முகாமை செய்யப்படுகின்றது. நுகெகொடயில் ஹாட்வெயார் கடையினை தொடர்ந்து முகாமை செய்துவரும் தனது மாமாவிடமிருந்து சீதனமாக பிலிப் இக்கடையினை முதலில் பெற்றுக் கொண்டார். தற்போது தலைநகருக்கு அண்மையில் மூன்று பிரதான நகரில் மூன்று கடைகளை பிலிப் கொண்டிருக்கின்றார்.

புதிய உபகம்பனியான வரையறுக்கப்பட்ட டேவிட் அன்டனி பிலாஸ்டிக் (தனியார்) கம்பனியினை கிறிஸ்டினா முகாமை செய்கின்றார். பிலாஸ்டிக் தொழில்நுட்பத்தில் பொறியியலாளரான திரு.பிலிப் ஜோசப் என்பவரை கிறிஸ்டினா திருமணம் செய்தார். சீதனமாக பெற்றுக்கொண்ட 3 மில்லியன் ரூபாவுக்கு மேலதிகமாக 2 மில்லியன் ரூபாய்களை வங்கிக் கடனாக பெற்று இக்கம்பனியினை உருவாக்கினார். இதன் உற்பத்தி ஒரு வருடத்திற்கு முன்பு ஆரம்பிக்கப்பட்டதால் வங்கிக் கடனை அவர்கள் இன்னும் திருப்பிச் செலுத்தவில்லை.

ஸ்டீபன் இக்கம்னித் தொகுதிகளுக்கான நிதிக் கட்டுப்பாட்டாளராக தொழிற்படுவதுடன் அனைத்து கம்பனிகளின் வங்கிக் கணக்குகளுக்கான இரண்டாவது கையெழுத்திடுபவராகவும் காணப்படுகின்றார்.

நான்கு உபகம்பனிகளும் தமது தாயிடம் இருந்து நிதி உதவிகளைப் பெற்றுக்கொள்வது மட்டும் அல்லாது தமது தந்தையின் பெயருக்கான நன்மதிப்பினை பயன்படுத்தி வங்கிக் கடன்களையும் பெற்றுள்ளனர்.

வரையறுக்கப்பட்ட டேவிட் அன்டனி பிலாஸ்டிக் (தனியார்) கம்பனியின் முகாமை இயக்குனரான கிறிஸ்டினா பிலாஸ்டிக் தளபாடங்களை உற்பதி செய்யும் தமது கணவரின் ஆலோசனைக்கு அமைய தமது கம்பனியை விரிவுபடுத்த திட்டமிட்டார். இதற்கான மதிப்பிடப்பட்ட பொறி இயந்திரத்திற்கான செலவு ரூபா 4 மில்லியன் ரூபாவாகும் இருவரும் 1 மில்லியன் ரூபாவினை சேகரிக்க முடியும் அத்துடன் மேலும் 1 மில்லியன் ரூபாவினை வங்கியில் இருந்து பெறும்பொருட்டு வங்கியுடன் பேச்சு நடத்தி வருகின்றனர். மிகுதி பணத்தினை அவர்களது தாயிடம் இருந்து பெறமுடியும் என எதிர்பார்க்கின்றனர்.

a) வரையறுக்கப்பட்ட டேவிட் அன்டனி (தனியார்) கம்பனிக்கு பொருத்தமான நிறுவன கட்டமைப்பினை விதந்துரைக்க.

(10 புள்ளிகள்)

b) கிறிஸ்டீனாவும் ஜோசப்பும் தமது தாயிடம் கடன் பெற அனுகியுள்ளனர். அதற்கு அவர் தான் முதலில் ஸ்டீபனுடன் கலந்துரையாடி பின் இயக்குனர் சபையின் அனுமதியினை பெற வேண்டும் எனக் கூறினார். இச்சூழ்நிலையினை கருத்தில் கொண்டு திருமதி மரியதிரேசா அனிடனிக்கும் மகள் கிறிஸ்டீனாவுக்கும் இடையில் ஏற்பட்ட தொடர்பாடலினை விபரிக்குக.

(12 புள்ளிகள்)

c) இந் நிறுவனத்தில் திரு.ஸ்டீபனின் பங்களிப்பு என்ன?

(06 புள்ளிகள்)

(மொத்தம் 28 புள்ளிகள்)

2.

a) எவ்வாறு முகாமையாளர்களின் வேறுபட்ட ஆற்றல்கள் தமது நிறுவனங்களை வினைத்திறனாகவும் வினைநிறைவேற்றமகவும் முகாமை செய்வதற்கு உதவுகின்றது என்பதை விபரிக்குக.

(06 புள்ளிகள்)

b) ஓர் நிறுவனத்தில் வேறுபட்ட வகையான முகாமையாளர்களை அவர்களது "பரப்பு", "மட்டம்" என்பவற்றின் அடிப்படையில் அடையாளம் காண்க.

(06 புள்ளிகள்)

c) இன்றைய வியாபார உலகில் எல்லா முகாமையாளர்களாலும் எதிர் கொள்ளப்படுகின்ற வளர்ந்துவரும் சமகால சவால்களை சுருக்கமாக விபரிக்குக.

(06 புள்ளிகள்)

(மொத்தம் 18 புள்ளிகள்)

3.

a) Task சூழலில் காணப்படுகின்ற காரணிகளை அடையாளம் கண்டு அவை எவ்வாறு ஒரு நிறுவனத்தின் உயிர்வாழ்வு, இலாபம் என்பவற்றில் செல்வாக்கு செலுத்த முடியும் என விளக்குக.

(10 புள்ளிகள்)

b) ஒரு நிறுவனத்தின் வெற்றிகரமான செயற்பாட்டிற்கான சூழல் காரணிகளை கையாளுவதில் தொடர்பாடலின் பங்களிப்பினை விளக்குக.

(08 புள்ளிகள்)

(மொத்தம் 18 புள்ளிகள்)

LIBRARY

4.

a) *"பெரும்பாலான வியாபாரங்கள் தந்திரோபாயங்களை இரண்டு வேறுபட்ட மட்டங்களில் மேற் கொள்கின்றது".*

இவ்வேறுபட்ட தந்திரோபாய மாற்றுவழிகளை விபரிக்குக.

(04 புள்ளிகள்)

b) "SWOT" எனும் பதத்தினைவிளக்கி, ஓர் நிறுவனதிற்கு அதன் செயற்பாட்டினை விபரிக்குக.

(08 புள்ளிகள்)

c) பகுத்திறிவுள்ள தீர்மானம், மேற்கொள்ளுவதில் காணப்படும் படிமுறைகள் எவை? இதில் எந்தப்படிமுறை அதனை நடைமுறைப்படுத்துவதில் சிக்கலானது? ஏன்? விளக்குக.

(06 புள்ளிகள்)

(மொத்தம் 18 புள்ளிகள்)

5.

a) நீர் ஓர் நிறுவன வடிவமைப்பினை பாதிக்கின்ற அடிப்படைச் சூழ்நிலை காரணிகளை விளக்குக.

(06 புள்ளிகள்)

b) "வேலைச் சிறப்பியல்பாக்கல்" என்பதனால் கருதப்படுவது யாது? என்பதனையும் அதன் அனுகூல பிரதிகூலங்களையும் சுருக்கமாக விளக்குக.

(06 புள்ளிகள்)

c) கட்டுபடுத்தல் செய்முறையில் காணப்படுகின்ற படிமுறைகள் எவை?

(06 புள்ளிகள்)

(மொத்தம் 18 புள்ளிகள்)